| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 49/2010 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | மாது | நாள் | 16.08.2021 |
| தகப்பனார் பெயர் | செங்கோடகவுண்டர் | | |

2 மற்றும் 8 ம்பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

இன்றைய தேதிவரை 2 , 8 பிரதிவாதிகள் பெயரிலுள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய பரிகாரம் கோரவில்லை என்றால் ஆமாம். தவறான சொத்துவிபரத்துடன் பாகம் பிரிக்காத மற்றும் உட்பிரிவுசெய்யாத சொத்து குறித்து என்னுடைய தகப்பனார் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் நாங்கள் கூட்டுக்குடும்பமாக இருந்ததால் பாகம்பிரிக்காமல் உள்ளோம். நான் வாங்கிய 2 ஏக்கர் 20 செண்டைதவிர மற்ற சொத்துகளில் உள்ள 2, 8 பிரதிவாதிகள்குறித்து கேள்வி எழுப்ப எனக்கோ, என்னுடைய தகப்பனாருக்கோ உரிமையில்லை என்றால் அது என்னுடைய பாட்டி அத்தாயம்மாளின் சொத்து. வழக்கில் எந்தவொரு இடத்திலேயாவது மணி வாங்கிய சொத்து அத்தாயம்மாளின் சொத்து என குறிப்பிட்டுள்ளோமா என்றால் இல்லை. உட்பிரிவு செய்யப்படாமலும், குறிப்பிட்டு சக்குபந்தியை கூறாமலும் நீதிமன்ற ஆணையாளரை நியமித்து வழக்கு சொத்தை பார்வையிட அழைத்து சென்றோம் என்றால் பத்திரத்தில் உள்ள சொத்துகளை குறித்து நீதிமன்றம் உத்தரவிட்டதன் பேரில் நீதிமன்ற ஆணையாளர் பார்வையிட வந்தார். மணி தன்னுடைய சித்தப்பா இளையப்பனிடமிருந்து கிரயம் பெற்ற பொதுவில் உள்ள 2.20 யை தவிர மீதி சொத்துகளை தான் தன்னுடைய குடும்பத்திற்குள் ஆவணங்களை ஏற்படுத்திக் கொண்டார் என்பதால் எங்களுக்கு தெரியாமல் ஆவணத்தை ஏற்படுத்தி உள்ளதாக கூறுவது பொய் என்றால் ஆள்மாறாட்டம் செய்து பத்திரம் ஏற்படுத்திக் கொண்டார். பிரதிவாதிகளை கேவலப்படுத்த வேண்டுமென்பதற்காக மீண்டும் மீண்டும் பொய்யாக ஆள்மாறாட்டம் செய்து பத்திரம் ஏற்படுத்திக் கொண்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் தற்போது துறை ரீதியாக மண்டல பதிவாளர் விசாரணை செய்து வருகிறார். அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை ஆனால் ஜுலையில் விசாரணைக்கு சென்று வந்தேன். நான் மற்றும் என்னுடைய தகப்பனார், கிராம நிர்வாக அலுவலர், வட்டாட்சியர் ஆகியோரை விசாரித்து தான் மணி பெயரில் பட்டா மாற்றப்பட்டது என்றால் ஆமாம். ஆனால் ஒருதலைப்பட்சமாக எங்களுடைய

ஆவணங்களை பரிசிலனை செய்யாமலும், கிராம நிர்வாக அலுவலரின் அறிக்கையை பரிசிலனை செய்யாமலும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதனை கோட்டாட்சியர் ரத்து செய்துவிட்டார். அந்த கோட்டாட்சியர் விசாரணையின்போது மணி ஆஜராகவில்லை என்பதற்காக தான் ஒருதலைப்பட்சஉத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் ஆமாம். பலமுறை அழைப்பாணை அனுப்பியும் ஆஜராகாததால் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதற்கெதிராக டி.ஆர்.ஆ.விடம் மேல்முறையீடு நடைபெற்றது என்றால் ஆமாம். அதில் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் தங்களுக்கு அதிகாரம் இல்லை எனவும், நீதிமன்றத்தின் மூலம் பார்த்துக் கொள்ளுமாறும் உத்தரவிட்டார் என்றால் ஆமாம். அந்த உத்தரவிற்கு பின்னிட்டும் மணி பெயரிலுள்ள ஆவணங்களை ரத்து செய்ய பரிகாரம் கோரவில்லை என்றால் ஆமாம். இவ்வழக்கில் என்னுடைய தகப்பனார் பெற்ற இடைக்கால உத்தரவு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. இ.ம.எண்.176 ல் மணி தாக்கல் செய்த மனு அனுமதிக்கப்பட்டது என்றால் ஆமாம். ஒரு பகுதிக்கு தான் மணி உத்தரவு பெற்றுள்ளார். முழு சொத்துகளுக்கும் எங்களுக்கு உத்தரவு உள்ளது. மணி சுவாதீனத்தில் உள்ள நிலையில் 25.1.2010 ல் அத்துமீறி நுழைய முயற்சி செய்ததாக கூறுவது பொய் என்றால் அது தவறு. பிரதிவாதிகள் பெயரிலுள்ள பத்திரம் குறித்து பரிகாரம் கோராமல் அந்த பத்திரங்கள் பொய் என நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. 2 ஏக்கர் 20 செண்டை தவிர மீதி சொத்துகளில் மணி குடும்பத்தார் சுவாதீனத்தில் உள்ள நிலையில் அவர்கள் சுவாதீனத்தில் இல்லை என நான் கூறுவது பொய் என்றால் முழு சுவாதீனமும் எங்களிடம் தான் உள்ளது. பிரதிவாதிகளை தொந்தரவு செய்ய வேண்டும் என்பதற்காக அவர்களுடைய தாயார் வழியில் வந்த சொத்துகளையும் மறுத்து வழக்காடி வருகிறோம் என்றால் அது தவறு. 8 ம்பிரதிவாதிக்கு எந்ததெந்த வழியில் சொத்துகள் வந்தது என்பது குறித்து வழக்குரையில் கூறவில்லை என்றால் கூறியுள்ளோம். 2, 8 பிரதிவாதிகளின் ஆவணங்கள் தவறானது என நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. 2, 8 பிரதிவாதிகள் தங்களுடைய சொத்துகளுக்கு அ.வ.எண்கள்.176/2011 மற்றும் 60/2017 தாக்கல் செய்துள்ளதால் அது அவர்களுக்கு சார்பாக தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல. அ.வ.எண்.60/2017 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. தாவாவில் கூறாத உட்பிரிவுகளை சத்திய பிரமாண வாக்குமூலம் பத்தி 12 மற்றும் 13 ல் கூறியுள்ளது ஏற்று

கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வழக்கை திருத்தாமல் உட்பிரிவுகளை குறித்து கூற எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பழனியம்மாள் பெயரிலுள்ள செட்டில்மெண்ட் பத்திரத்தையும், 7 ம்பிரதிவாதி ராசாத்திமணிக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் குறித்தும் பரிகாரம் கோரவில்லைஎன்றால் ஆமாம். அவர்களுடைய சொத்தை குறித்து கூற எனக்கு உரிமையில்லை என்றால் தவறான ஆவணம் ஏற்படுத்தி எங்களுடைய சொத்தை அபகரித்துள்ளனர். எங்களுடைய பத்திரத்தில் பொதுவில் 3 ல் ஒரு பாகம் என குறிப்பிட்டுள்ள நிலையில் அதனை அளந்து சரியாக நீதிமன்ற ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார் என நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையாளர்,அளவையர் கொடுத்த புது உட்பிரிவை வைத்து அறிக்கை தாக்கல் செய்துள்ளதற்கு மணி தரப்பில் ஆட்சேபணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கையை நீக்கறவு செய்ய கோரி மணி தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டு, அவருக்கு எதிராக சீராய்வு மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது தள்ளுபடி செய்யப்பட்டள்ளது. அது மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய தகப்பனார் உண்மையை கூறியுள்ளதால் அவருடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தையே மீண்டும் தட்டச்சு செய்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் நான் உண்மையை தான் கூறுகிறேன். வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

11 முதல் 13 பிரதிவாதிகள் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

ஒம்/—எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.